உ
சிவமயம்




# தவத்திரு
# யோகசுவாமிகளின் நற்சிந்தனைகள்


முரசொலி வெளியீடு
விபவ, ஆவணி
1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தவத்திரு

# யோகசுவாமிகளின் நற்சிந்தனைகள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில்
விபவ வருட மஹோற்சவ தேர்த்திருவிழாவன்று
அடியார்களுக்கு வழங்குவதற்கென
முரசொலி நிறுவனத்தினால் வெளியிடப்பெற்றது

09. 09. 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

காப்பு

நந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கரு ளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே.

# திருப்பள்ளியெழுச்சி

அன்னை தந்தையர் மைந்தர்கள் ஒருபால்
அருமைசேர் சோதரர் உறவினர் ஒருபால்
பொன்னணி சிறுமியர் சிறுவர்கள் ஒருபால்
புகழ்பவர் இகழ்பவர் போபவர் ஒருபால்
சென்னியி லஞ்சலி கூப்பினர் ஒருபால்
தேசத்தில் திரிந்து இரப்பவர் ஒருபால்
கண்ணிணை கண்டு களிக்கச்செய் பரனே
கடவுளே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே.

# ஏத்துக பொன்னடி

## நிலைமண்டில ஆசிரியப்பா

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்,
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.

## வீரமாமயில் ஏறும் வேலவ

இராகம்—கரஹரப்ரியா தாளம்—ரூபகம்

### பல்லவி

வீர மாமயில் ஏறும் வேலவ — விளங்கு
கௌரி பாலகா — வா.

### அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா — காக்கும்
கடவுள் துதிக்கும் நாதா. (வீர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்குஞ் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோக சுவாமி நேசா. (விர)

## ஈசனே நல்லூர் வாசனே

இராகம் — கமாஸ் தாளம் — ஆதி

பல்லவி

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா.

சரணங்கள்

பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும்வண்ணம்
வாவா. (ஈசனே)
தாசனை யோகசுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா. (ஈசனே)

## நல்லூரைக் கும்பிடு

இராகம் — ஜோகினி தாளம் — ஆதி

பல்லவி

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு — அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்.

அநுபல்லவி

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்கா யுடன்பழம் கொண்டுநீ செல்லு. (நல்லூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும் — குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் — செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்டஇடம் கலங்கிநீ திரியாதே. (நல்லா)

## சும்மாவிருக்கும் சுகமறிய வேண்டும்

திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும் — வேல் வேல்
சீவனே சிவனென்று தெரிந்துகொள்ள வேண்டும் —வேல்வேல்

உருவேற வேசெபிக்க வேண்டும் — வேல் வேல்
ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாமைவேண்டும்–வேல்வேல்

கருவூரில் வாராமை வேண்டும் — வேல் வேல்
கண்கவரும் மின்னாரை எண்ணாமை வேண்டும் — வேல் வேல்

குருபாதம் மறவாமை வேண்டும் — வேல் வேல்
குறைவொன்று மின்றி நாம்வாழ வேண்டும் — வேல் வேல்

கொல்லாமை கள்ளாமை வேண்டும் — வேல் வேல்
கோபம் பொறுமை கொள்ளாமை வேண்டும்—வேல் வேல்

எல்லார்க்கு மன்புசெய்ய வேண்டும் — வேல் வேல்
எனதுயா னென்பதை விட்டுவிட வேண்டும் -- வேல் வேல்

நல்லோ ரிணக்கமே வேண்டும் — வேல் வேல்
நடுநிலைமை மாறா திருக்க வேண்டும் — வேல் வேல்

சொல்போலே சொல்லுறுதி வேண்டும் — வேல் வேல்
சும்மா விருக்குஞ் சுகமறிய வேண்டும் — வேல் வேல்.

## வேல் வேல்

அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு — வேல் வேல்
ஆசா னடிக்கீழ் அமர்ந்துநீ நில்லு
கொஞ்சங்கொஞ்ச மாய்மனதை வெல்லு — வேல் வேல்
கூடாத கூட்டத்தை விட்டுநீ செல்லு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சியர் ஆசையைத் தள்ளு — வேல் வேல்
வாஞள் ஆசையைப் பேஞமல் கொள்ளு
சஞ்சலம் வந்தால் வரட்டும் — வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு. 2

அஞ்சுபூதமும் நீயல்ல நம்பு — வேல் வேல்
ஐம்பொறி ஐம்புலனும் நீயல்ல நம்பு
வெஞ்சினம்நெஞ்சில் வாராமல் காப்பாய் — வேல் வேல்
வேறு பொருளில்லா நிட்டையில் சேர்ப்பாய். 3

பஞ்சம் படைவந்த போது — வேல் வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப்போல் பிறன்பொருள் எண்ணு — வேல் வேல்
நாங்கள் சிவமென நாளும்நீ நண்ணு. 4

கஞ்ச மலர்ப்பதம் வாழ்க — வேல் வேல்
கருணைநிறைந்த பெரியோர்கள் வாழ்க
இந்திரன் முதலியோர் வாழ்க — வேல் வேல்
இவ்வுலகி லுள்ளோர் யாவரும் வாழ்க. 5

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி — கிளியே!
இரவுபகல் காணேனெடி. 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி — கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி. 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி — கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் — கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி — கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி. 5

பரிதி காயில் வாடாது
பவனம் வீசில் வீழாது
பரவை சூழில் ஆழாதடி — கிளியே!
படைகள் மோதில் மாயாதடி. 6

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தை தந்த செல்வனெடி — கிளியே!
சீரார் நல்லூரானெடி. 7

வந்ததிலும் போனதிலும்
மனதைவையாதே யென
விந்தையுடன் சொன்னானெடி — கிளியே!
விளங்கு நல்லூர் வாசனெடி. 8

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி — கிளியே!
கலங்காத வீரனெடி. 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல் பத்தும்
பூமியிற் சொன்னானெடி — கிளியே!
பொல்லாங்கு தீருமோடி. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமைப் பிணிக்கு மருந்து

இராகம் — சங்கராபரணம் தாளம் — ரூபகம்

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்தி மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே. 1

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார். 2

வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடித்
துதிப்பதைப் பார்த்திடுவோம். 3

## வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வம்

இராகம் – எதுகுலகாம்போதி தாளம் – மிசிரம்

பல்லவி

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே — யென்
வினைப்பகைதீர் தெய்வமே.

அநுபல்லவி

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பிவந்தேன். (வேலை)

சரணம்

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா. (வேலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமையான தெய்வம்

அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம்நாங்கள் அதையறிந்து வாழீர். 1

இன்னதன்மை என்றுநம்மை எடுத்துச்சொல்வா ருண்டே
என்னபய மெங்களுக்கு எல்லாஞ்சிவ மன்றோ? 2

அவனன்றி யோரணுவு மசையாதெனப் பெரியோர்
அன்றுசொன்ன நிறைமொழியை மறப்பதுவுஞ் சரியோ? 3

அங்கிங்கெ னுதபடி யெங்குஞ்சிவ மென்று
அறிந்தடங்கி யகிலத்திலே வாழ்வதுவே நன்று. 4

காணுங்கண்ணிற் கலந்தகண்ணே என்னுஞ்சிவ தொண்டர்
கருத்தைக்கண்டு வருத்தமற்று வாழ்தல்சிவ தொண்டு. 5

அனைத்துமொன்று யிருக்குதென வறிந்தபெரி யோர்கள்
அடியிணையை முடிதனிலே அணிந்துகொண்டேன் சிறியேன்
6

## ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே

ஒழுக்கம் விழுப்பந்தருந் தம்பிமாரே
ஓமென்று சிந்தைசெய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்குந் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலுந் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டுந் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவே நாங்கள்காணும் 'தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதந் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமந் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே.

## தம்பி கேளடா

தாவித்தாவிச் செல்லும் மனத்தைத் தம்பிகேளடா
கூவிக்கூவி யழைத்துக் கூடக் குடியிருத்தடா. 1

சேவித்துஞ் சென்றிரந்துந் தம்பி கேளடா
சிவமேநா மென்றுதினஞ் சிந்தை செய்யடா 2

பாவித்தும் பாட்டிசைத்துந் தம்பி கேளடா
மூவிதமாம் ஆசைதன்னை முனிந்து வெல்லடா 3

வாவியாறு சேரிலங்கை நல்ல நாடடா
பாவியென்ற நாமந்தன்னைப் பகைத்து நில்லடா. 4

தூவிமயி லேறும்வேலைத் துதித்துக் கொள்ளடா
நாவினில் நமச்சிவாயம் நவின்று நில்லடா. 5

## குருலிங்கம்

சுந்தரற்குப் பெண்கொடுத்த சோதிலிங்கம்
துரைசுவாமி தனையீன்ற சொக்கலிங்கம்
சுந்தரத்தில் கடுநஞ்சை வைத்தலிங்கம்
கருதுவார் தங்கருத்தில் வாழும்லிங்கம்
அந்தரத்தில் மால்விடைமேல் வந்தலிங்கம்
அழுதபிள்ளை தனக்குப்பால் அளித்தலிங்கம்
இந்தவளஞ் சேரிலங்கை வந்தலிங்கம்
எனையாண்ட குருலிங்கம் என்றுங்காப்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமானைப் பார்த்துநின் ருடுமயிலே

இராகம் — ஆனந்தபைரவி

ஆடுமயிலே பணிந் தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே

வீடுநமக் கெப்போதும் சொந்த மென்றே
வினைசைப் படுவதெல்லாம் பந்த மென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக் கொண்டே
குனிழந்து குழைந்துநின் ருடுமயிலே. (ஆடுமயிலே) 1

பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமல்ல வென்றே
ஆனந்தமாய்ப் பணிந்தெழுந் தாடுமயிலே. (ஆடுமயிலே) 2

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக் கொண்டே
இாந்திரந் தைந்தெழுத்தைப் பண்ணிக் கொண்டே
ஔவியம்பொ ருமைகோபம் அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே (ஆடுமயிலே) 3

ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கேட்டே
ஓம்சிவாய நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக்களித்துநின் ருடுமயிலே. (ஆடுமயிலே) 4

## சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம் பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக்கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன் செயயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர்முன்னும் சொல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்து மென்று சொல்லு சிவமே
உல்லாச மாயெங்குஞ் சொல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டிமனத்தையாளச் சொல்லு சிவமே. 7

## சிவநாமஞ் சொல்லுவோம்

இராகம் — நாட்டை  தாளம் — ரூபகம்

### பல்லவி

நாமஞ் சொல்லுவோம் — சிவ
நாமஞ் சொல்லுவோம்.

### சரணங்கள்

நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம். (நா) 1

சோம சுந்தரன் பாதங் காணுவோம்.
சும்மா விருக்கின்ற சூட்சம் பேணுவோம். (நா) 2

சினத்தைக் கொல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்து மவனென்று அகத்தி லெண்ணுவோம். (நா) 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் மலர்கொண்டு காலை மாலையும்
செய்ய மேனியன் அடியில் வீழுவோம். (நா) 4

என்பு பூண்டவன் என்னை யாண்டவன்
இவனை வேண்டினுல் என்று மின்பமே. (நா) 5

சிரித்து முப்புர மெரித்த தேவனை
சிந்தை செய்குவோர் தேவ ராவரே. (நா) 6

கமல நான்முகன் கண்ணன் காணகிலான்
எமது நாயகன் என்பர் பெரியரே. (நா) 7

வழிகள் இரண்டையு மடைக்க வல்லவர்
ஒழியா இன்பத்தி லுற்று வாழ்வரே. (நா) 8

தேனும் பாலினு மினிய தெய்வத்தை
நானும் நீயுமாய் நாளும் போற்றுவோம். (நா) 9

## கண்டபத்து

(நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா)

பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே. 1

தந்தைதாய் மைந்தர் தமர்தார மென்றடியேன்
பந்தத்துட் பட்டுப் பாழாகாப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானை யிலங்குநல்லை கண்டேனே. 2

தேகமே மெய்யென்று சிதடனுய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை
நாக மலர்சொரியும் நல்லைநகர்க் கண்டேனே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையான் மதிமயங்கி யிடர்ப்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினா லாண்டுகொள்ளக் கடவுடிரு வுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி யவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. 4

காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுதலோன்
நாட்டிலே ஞான குருவாய் நயந்துவந்து
மீட்டா னவன்றன் விரையார் மலரடியை
மாட்சிமைசேர் நல்லைத்தேர் மாணடியிற் கண்டேனே. 5

மாலயனுந் தேடி யறியா மலரடிகள்
கோல வருட்குருவாய்க் குவலயத்தி லேபோந்து
சாலப் பெரும்பகையைத் தானீக்கி யாண்டானை
ஞாலம் புகழுநல்லைத் தேரடியிற் கண்டேனே. 6

நானாரென் னுள்ளமா ரெனநாடு மெய்யடியார்
தானாக நின்றருள்செய் சங்கரனே தாரணியிற்
கோனாக வந்தாண்டான் குளிரார் திருவடியைத்
தேனார் பொழில்நல்லைத் தேரடியிற் கண்டேனே. 7

எட்டு மிரண்டு மறியா வெனக்குநல்ல
பட்ட மளிக்கப் பரிந்துவந்த மெய்ப்பொருளை
வட்டஞ்சூழ்ந் தடிபரவும் மங்கைமார் கொண்டாடுஞ்
சிட்டர்வாழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. 8

என்னையன்றி வேறொன்று மில்லை யெனச்சொன்ன
அன்னையினு மன்புடைய வாசா னவனிதனிற்
கன்னலொடு செந்நெல் கமுகு கதலிபலா
மன்னுநல்லை மாநகரிற் றேரடியிற் கண்டேனே. 9

இரவுபக லற்ற ஏகாந்த வீட்டிலெனைப்
பரவிப் பணியவைத்த பரமன் குருவாகிச்
சரண கமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர்குறையாக் குளிர்நல்லை கண்டேனே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆன்மா நித்தியம்

இராகம் — நடனபைரவி  தாளம் — ஆதி

### பல்லவி

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய.

### அநுபல்லவி

இந்த ஆன்மா நித்திய மென்ற (அந்த)

### சரணங்கள்

மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன. (அந்த)

தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன. (அந்த)

கௌரிம னோகரி ஆனந் தாச்சி
கமல ஆச்சிசெல் லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடு முத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே. (அந்த)

# குருதரிசனம்

### வெண்பா

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்த மெலாந் தீர்க்கும் வடிவேல் — திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடாநீ யென்றான் அவன். 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் — சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து.

வண்டுபண் செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் — கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
இரடாபற் றென்றான் சிரித்து.

கன்னலொடு செந்நெல் கதலிபலா மாவர்க்கந்
துன்னுநல்லூர்ச் சாமி திருமுன்றில் — மன்னுசீர்த்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
சீரடியார் சூழ்ந்து நின்றார் தேர்.

அயலறியா வந்தணர்க ளான்றநல் லூர்ப்பதியிற்
கயற்கணார் காமவலை சேரா — வியல்புடைய
செல்லப்ப னென்னுஞ் சிவகுருவை நான்கண்டேன்
நல்லதப்பா வென்றான் நயந்து.

ஒன்றோ விரண்டோ வொருமூன்றோ வென்றெவரும்
அன்றுதொட் டின்றுவரை யாராய — ஒன்றுக்கும்
எட்டாமல் நின்ற னெழிற்குருவாய் நல்லூரிற்
பட்டமளித் தானெனக்குப் பார். 6

நீராய் நெருப்பாகி நெடுநிலனாய்க் காற்றாகி
ஆராலுங் காணா வமலனக்கே — நேராகச்
சற்குருவாய் வந்தேயென் சந்தேகந் தீர்த்தாண்டான்
நிர்க்குணம் பூண்டேன் நினை

புனலொழுகப் புள்ளிரியும் பொன்னீழ நாட்டில்
அனவேந்து வான்றன் புதல்வன் — மனமார
வாழ்நல்லை யம்பதியில் வாழ்வளிக்கச் சற்குருவாய்த்
தாள்காட்டி யாண்டான் தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்குரு தரிசனம்

இராகம் – சாமா          தாளம் – ஆதி

பல்லவி

சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம்
தாளிணை பணிநீ தினம்

அநுபல்லவி

தாந்தன்னை யறியுமே
சாந்தமுஞ் செறியுமே

சரணங்கள்

பேரன்பு பெருகிவிடும் பேதமை கருகிடும்
பிரியாப் பிரியமெல்லாம் பேசாம லகன்றிடும் (சற்குரு)

ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதிவரும். (சற்குரு)

தேவாதி தேவர்களுஞ் செய்வார் பணிவந்து
சிவன் சிவனெனுந் தெளிவுமுண் டாகுமே. (சற்குரு)

## ஆநந்த நடனம் ஆடினன்

பல்லவி

ஆநந்த நடனம் ஆடினன்
அல்லும் பகலும் நல்லூர் வீதியிற் செல்லப்பன்

அநுபல்லவி

மோனந் திகழுஞ்சிவ யோகியர்தா மறியார்
முழுவது முண்மையென முகமலர்ந் தோதுவான் (ஆநந்த)

சரணங்கள்

ஈனந் தரும்பிறவி யெடுத் துழலாமல்
என்னைவந் தாண்டுகொண்டான் இன்பத்தில் மாண்டு
கொண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் தவமிரண்டுஞ் சரியை கிரியையிண்டும்
சதுர்வித வுபாயத்தாலே தானுக வென்னைச் செய்தான்
(ஆநந்த) 1

முன்னிலை யில்லையென்றும் முழுவது முண்மையென்றும்
முடிய மாயவிருள் ஒட வருள் புரிந்தான்
அந்நிலையி லேயுட லாவியவன் வசமாச்சு
ஆகா அதையறிவார் ஆர்தானிவ் வையகத்தில். (ஆநந்த) 2

## சற்குரு தாள்கள் வாழ்க

அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனுக்குஞ் சற்குரு தாள்கள்வாழ்க. 1

ஆக்கை நீ யல்லை நீயோ ஆன்மாவென் றெனக்குச் சொல்லித்
தீக்கைவைத்தாண்டு கொண்டதேசிகன் றிருத்தாள் வாழ்க 2

இருந்துபா ரென்றெனக்கோர் இனிய நல் வாக்குத்தந்த
அருந்தவன் என்னும் வல்ல ஆசான்றன் தாள்கள் வாழ்க 3

ஈயாத புல்லர் தங்கள் இல்லத்திற் கேகாவண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள் வாழ்க 4

உன்மத்தன் போலேவந்தென் னுடல் பொரு ளாவிமூன்றும்
தன்னத்தம் வாங்கிக்கொண்ட சற்குரு தாள்கள் வாழ்க. 5

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள் வாழ்க. 6

எண்ணிய வண்ணம் வாழ எனக்கு நல் லருளைத்தந்த
கண்ணிய முடைய செல்வன் கழலடி யென்றும் வாழ்க 7

ஏடவிழ் கோதைமாதர் எழில்கண்டு மயங்கா வண்ணம்
தாடலை தன்னில் வைத்த சற்குரு தாள்கள் வாழ்க 8

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னைநோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம் வாழ்க 9

ஒரு மொழி யதனுலென்னை ஓவியம் போலவாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள் வாழ்க 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெல்லாம் விளங்கக் காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் றிருத்தாள் வாழ்க 11
ஒளவன நல்லை தன்னில் அழகிய ஆடல்காட்டிச்
செவ்வியதினுண்டு கொண்ட செல்வன்றன் தாள் வாழ்க 12
அலைகமுங் காசுந்தேடி அலைந்துநான் திரியா வண்ணம்
நல்குதல் செய்தநல்ல நாதன்றுள் வாழ்க! வாழ்க! 13

## ஐயனே சற்குருநாதா

இராகம் — சஹானு     தாளம் — ஆதி

பல்லவி

ஐயனே சற்குருநாதா — உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா — உனைத்
தோத்திரஞ் செய்தேன்பொற் பாதா (ஐய)

சரணங்கள்

ஈயாத புல்லரைக் கூடி — நானும்
இடர்ப்பட் டேன்வெகு கோடி
ஓயாம லுன்புகழ் பாடி — நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி (ஐய)

ஆதார மாறையுந் தாண்டி — அருள்
அம்பலத் தேநின்று வேண்டி
சூதான மனந்தினந் தூண்டி — நானும்
தொடர்ந்துவந் தேனினைந் தாண்டி (ஐய)

## எழில் நல்லைவாசன்

பல்லவி

இராகம் - இந்தோளாம்     தாளம் ஆதி

எங்கள் குருநாதன் எழில்நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநுபல்லவி**

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாருத மௌன தியானப்ர வேசன் (எங்)

**சரணங்கள்**

அன்பர்சகாயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலும்நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலும்மென்றன் மனத்தினில் தாண்டவன் (எங்)

வஞ்சம் பொருமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்ச மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர் தம்போனெஞ்சிற் பண்புட னினிப்பவன் (எங்

# ஓம் தத் சத்

இருவருந் தேடிக் காணு இறைவ னென்போலுருத்தாங்கி
இணங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னுனிவனென்ன
ஒருவரு மறியா தோடியுலாவி யுவகை பூத்த முகத்தினராய்
ஒருநா ளென்றனை யுற்று நோக்கிஓர் பொல்லாப்புமில்லை யென்று
அருவமுங் காட்டி யுருவமுங் காட்டி யப்பாற் கப்பாலாம்
அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டி யந்த மாதி யில்லாச்
சொரூபமுங் காட்டிச் சும்மா விருக்கும் சூட்சத்தில் மாட்டி விட்டான்
துன்ப மிறந்தன வின்ப மிறந்தன சோதிசோதி சிவசோதி. 1

சிவத்திலே வளர்க்கும் பாக்கிய மெமக்குச் சித்தித்த தினிமேலே
தெய்வம் வேறே யுண்டென வெண்ணுஞ் சிந்தையு மிறந்ததுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவத்தினிற் செல்லும் மனத்தினை வெல்வோம் ஐம்பொறி
வழிச்செல்லேம்
அழியா மெய்ப்பொரு ளாகிய ஆன்மா அறிவோம்
நாம்நன்ருய்
தவவழிச் செல்வோம் குருமொழி கொள்வோம் தன்னைத்
தானறிவோம்
சாந்தம் பொறுமை யேய்ந்த நற்பணி சந்தத மணிந்து
கொள்வோம்
உவத்தலுங் காய்தலு மோடி யொளித்தன ஒன்றுங்
குறைவில்லேம்
உண்மை முழுதும்நீ ஓதுக தினமும் ஓம்தத் சத்ஓம். 2

கதிரவ னெழுமுன் காலை யெழுந்து கைகால் முகங்கழுவி
கடிமல ரெடுத்து மாலை தொடுத்துக் கடவுளைப் பூசனைசெய்
அதிர வராமுன் மனத்தினை யடக்கி ஐம்பொறி
வழிச்செல்லாது
ஆண்டவன் திவ்விய பாதத்தை வேண்டி ஆசையை
வென்றிடலாம்
முதிர முதிர முழுவது முண்மை யெனமுனி சொன்னமொழி
முகமுக மாகக் கண்டு தெளிந்து முத்தியிற் சேர்ந்திடலாம்
இதிலே ஐயமில்லை யில்லை யெல்லா மவன்செயலே
இரவும் பகலு மிதய வெளிக்குள் ஏத்துக ஓம்தத்சத். 3

எண்ணி யெண்ணிப் பணிவார் நெஞ்சே யீசன் உறைகோயில்
இருந்துங் கிடந்தும் நடந்துந் தொடர்ந்தும்
ஏத்திப் பணிவோமே
புண்ணிய பாவ மிரண்டுங் கற்பனை போக்கொடு
வரவில்லாப்
பொருளே நாங்கள் அருள்கொண் டறிநீ புத்தியை
நாட்டாதே
மண்ணில் வந்து பிறந்ததும் வாழ்ந்ததும் மாமா யையிதனை
ஆதவ ரறிவார் மற்றவ ரறியார் மதியா தேயிதனை
எண்ணில் காலம் உயிரோ டிருப்போம் ஏதுக்கு மஞ்சாதே
இயைந்த படிநீ நடந்துகொ ளென்றும் ஏத்துக
ஓம்தத்சத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் — எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் — என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம். (அத்து) 1

அட்ட வசுக்களுங் காப்பாம் — எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் — எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம். (அத்து)

பிராண னபானனுங் காப்பாம் — என்னை
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் — எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம். (அத்து) 4

பஞ்சப் புலன்களுங் காப்பாம் — என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் — நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம். (அத்து) 3

சந்திர சூரியர் காப்பாம் — எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரந் காப்பாம் — நான்கு
மறைகள் சிவாகமம் மாதிலங் காப்பாம். (அத்து) 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னு லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org